ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Nature and Man in Vauvaal Desam Novel

# வௌவால் தேசம் புதினத்தில் இயற்கையும் மனிதனும்

Dr. M. Iraivani
*Assistant Professor, Tamil Research Centre, Lady Doak College, Madurai, India*

முனைவர் மு. இறைவாணி
*உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, இந்தியா*

***Article Info:***

Received 07-12-2022 | Accepted 06-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 08-11

**ABSTRACT**

The people of Tamil Nadu live in harmony with nature. But in the change of time, people forget nature and grow artificially and live without realizing the destruction of nature. Therefore, Sahitya Akademi awardee Cho. Dharman, who realized that it is the imperative of time to take up the relationship between man and nature, has recorded the relationship between nature and man very well in his fifth novel, Vauvaal Desam. This novel has been created focusing on the events that took place in the 1800s. Wales Durai, serving as a major in the British Queen Elizabeth's army, gets promoted by killing Kattabomman, Umaithurai and Maruthu brothers on the Queen's orders. The task given to him is to know and provide information about the lifestyles of the people living on the banks of the Tamiraparani river. In order to do that, he learns the Tamil language and learns about the natural life of the people. This novel records the coexistence of nature and man in Durai's view.

***Keywords:***

*The resource of Tamiraparani river, Bounty Rain, Guardian Goddess Kanmaai, Soil Protecting Roots, Self Reliance Lifestyle, Self Sufficient Society, Part of Nature People, Living Philosophy, Children of the Forest, Sons of the Earth*

---

## முன்னுரை

'இவ்வுலகம் இனியது' என்பார் பாரதியார். அவரது பார்வையில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், கடல், மலை, காடு, மழை அனைத்தும் இனியவை. தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு உயிரினத்தையும் இனியனவாக எண்ணினார். மனிதனும் இயற்கையின் படைப்புதான். இயற்கையோடு தொடர்பு கொள்ளும் போது மனிதன் ஆற்றல் பெறுகிறான். இயற்கையோடு இயைந்து வாழ்பவர்களுக்கு இயற்கையானது, அறிவாகவோ, ஆற்றலாகவோ, செல்வமாகவோ தன்னை வாரி வழங்குகிறது. தன்னை வாழ வைக்கும் இயற்கையை மனிதன், அழித்து வாழக் கூடாது. வாழவும் முடியாது. இயற்கையோடு மனிதன் கொண்ட தொடர்பினை, சாகித்ய அகாதமி விருது பெற்ற சோ. தர்மன் அவர்கள் தமது ஐந்தாவது புதினமான வௌவால் தேசத்தில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். 1800ஆம் ஆண்டுக் கால கட்டங்களில் நடந்த நிகழ்வுகளை மையமிட்டு இக்கதைப் படைக்கப்பட்டுள்ளது. இயற்கையும் மனிதனும் இயைந்து வாழ்ந்த முறையினை புதினம் எங்ஙனம் பதிவு செய்திருக்கின்றது என்பதனை எடுத்தியம்புவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**"இயற்கையழகைத் துய்க்கும் ஆற்றல் முதிர்ந்த பண்பாட்டின் சின்னமாகுமென்று வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறுவர்."**[1] அக்கருத்துப்படி முதிர்ந்த பண்பாட்டின் அடையாளம் நம் தமிழ்ச்சமுதாயம். அச்சமுதாயம் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வாழ்க்கையை இப்புதினம் பதிவு செய்கின்றது.

## வேல்ஸ் துரையின் பார்வையில்...

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் இராணுவத்தில் மேஜராக பணியாற்றும் வேல்ஸ் துரை, மகாராணியின் கட்டளைக்கிணங்க தமிழகம் வந்து, கட்டபொம்மனைத் தூக்கிலிடுகிறார். மேலும், திட்டமிட்டு ஊமைத்துரை, மருது சகோதரர்களைக் கொன்று, மருது சகோதரர்களின் மகனை நாடு கடத்துகிறார். அதோடு அவர்களின் இரத்த சொந்தம் யாரும் இந்த நாட்டில் இருக்கக் கூடாது என ஏராளமான மக்களை நாடு கடத்துகிறார். ஊமைத்துரையைக் கண்டுபிடிப்பதற்காகப் பல ஊர்களையும் சுற்றித் தேடி அலைந்த போது வேல்ஸ் துரை மக்களைப் பார்த்து அவர்களின் வாழ்வியலைப் பார்த்து வியந்து போகின்றார். மன்னனுக்காக உயிரைக் கொடுக்கத் தயங்காத மக்கள். இயற்கையோடு இயைந்து மண்ணும் மக்களும் உறவாடுவதைக் கண்டு பெரு வியப்புகிறார். தினமும் தான் காணும் காட்சிகளை தன் டைரியில் பதிவு செய்கிறார். ஊமைத்துரையைத் தூக்கிலிட்டபின் மேஜர் வேல்ஸ், மேஜர்கர்னல் எனப் பதவி உயர்வு பெறுகிறார்.

கறுப்பு மண்ணின் மைந்தர்களான மக்களைப் பற்றிய முழுமையான வாழ்வியலையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் கட்டாயம் இவர்கள் மொழியை நன்கு கற்றுத் தேர வேண்டும் என்றுணர்ந்து, துரை அவர்கள் வீரபத்ர பிள்ளையிடம் தமிழ் மொழியை கற்றுக் கொள்கிறார். தமிழ் மொழியைக் கற்று அதன் வாயிலாக மக்களுடன் பழகி வாழ்வியலைப் புரிந்து கொள்கிறார். **"ராணுவத்தின் வேலை யுத்தத்தில் எதிரிகளின் உடல்களை அழிப்பதாக வேண்டுமானால் இருக்கலாமே ஒழிய அவர்களின் உணர்வுகளை அழிப்பதாக இருக்கக் கூடாது. அவர்களுடைய அக உணர்வுகளை அழிப்பது பாவச்செயலாகும்"**[2] இயற்கையோடு இயைந்து வாழும் மக்களைப் புரிந்து கொண்டு அவர்கள் வாழ்க்கை தம்மால் பாதிக்கக் கூடாது என எண்ணுகிறார். எப்பொழுதும் ராணுவ சீருடைக்குள் ஒரு வெள்ளையாடையை கழற்றாமல் அணிந்திருக்கிறார். உடையில் விறைப்பைக் காட்டினாலும் மனதால் எளிமையானவராகத் துரை இருப்பதாக இப்புதினம் இயம்புகிறது. அவர்

வழியில் கதை பயணிப்பதை நம்மால் உணர முடியும். துரையின் பார்வையில் நம் மண் என இப்புதினத்தை நாம் நோக்கலாம்.

## இயற்கையும் மனிதனும்

நாயை தன் கட்டுக்குள் வைக்கும் லாலிக்காரனைப் பார்த்து வியந்து இப்படியும் உயிர்களைத் தம் கட்டுக்குள் கொண்டு வர இயலுமா? என எண்ணிய வேல்ஸ்துரை, **"இயற்கையையும் இந்த மனிதர்களையும் பிரித்துப் பார்க்க முடியவில்லை. கற்சிலைகளை மரங்களைச் செடிகளை பூக்களை வணங்குகிறான். மிருகங்களை அவன் கும்பிடும் சாமிகளுக்கு வாகனமாக்கி இருக்கிறான். எல்லாமே சொல்லி வைத்தது மாதிரி நடக்கிறது. இயற்கை இவர்களுடன் பேசுகிறது."**[3] இயற்கையும் மனிதனும் ஒரே நேர் கோட்டில் பயணிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறார். சோ. தர்மன் அவர்களும் இயற்கையும் மனிதனும் என்றும் பிரிக்க முடியாதவர்கள் அதனை இன்றைய மனிதன் உணர வேண்டும் என்ற அவருடைய நோக்கம் இதில் வெளிப்படுவதைக் காணலாம்.

## தாமிரபரணி ஆற்றின் வளம்

ஒரு நாட்டின் வளம் அங்கு ஓடும் ஆறுகளைப் பொறுத்தது. கதைகளாலும் தொன்மங்களாலும் நிரம்பி இருக்கும் தாமிரபரணியை விரிவாகப் பதிவு செய்கிறார். ஆண்டுக்கு ஆறு மாசம் தண்ணீர் மீதி ஆறு மாசம் வறண்டு கிடந்த தாமிரபரணி எப்படி வற்றாத ஜீவநதியாகத் தாமிரபரணி பிரவாகித்தது என்பதை விவரிக்கும் போது ஆச்சரியத்தால் நம் நெஞ்சம் நெகிழ்கின்றது.

**"முத்தாலங்குறிச்சி, தாமிரபரணி நதி பாயும் கரையோரக் கிராமம். முப்போகம் விளையும் செழித்த நதி நதி தீரம். கரையெங்கும் வளர்ந்து நிற்கும் வனாந்திரம். பல வகைப்பட்ட மரங்கள், எந்நேரமும் பறவைகளின் கெச்சட்டம்."**[4] என ஆற்றின் வளம் வர்ணிக்கப்படுகிறது.

## வரமாகிய மழை

மழை வளம் நாட்டின் வளம். தமிழகத்தின் வளமைக்குக் காரணமான, **"மழை வருடம் மாசந் தவறாமல் விருந்தாளியைப் போல வந்து கண்மாய்கள் குளங்களை எல்லாம் நிறைத்துவிட்டுப் போய் விடுகிறது. மீண்டும் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது சரியாக வந்து விடுகிறது. தானியங்களைச் சேமிப்பது மட்டுமே அவர்களுடைய வேலையாய் இருக்கிறது. விளைவிப்பது மழை."**[5] மழை ஒரு வரமாக அமைந்ததை இப்பகுதி உணர்த்துகிறது. "சொல்லி வைத்தது போல் மிகத் துல்லியமாக காலம் தவறாமல் சரியாக அதே மாசத்தில் வந்து பெய்யும் மழை எப்படி வருகிறது. **"எத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் எங்களை ஏமாற்றி பட்டினி போடாத மழை."**[6] படைப்பாளர் தமிழகத்தின் மழை வளத்தைத் துரையின் குரலாகப் பதிவு செய்கிறார். மக்கள் வேண்டாமலேயே இயற்கையே அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட வளம் எங்கும் அமையாத ஒன்று என்பதை உணர முடிகின்றது.

## காவல் தெய்வம் - கண்மாய்

தண்ணீரில் அறிவியல் தொழில் நுட்பம் அறிந்தவன் தமிழன் என்பதனை இப்புதினம் பிரதிபலிக்கின்றது. மனித முயற்சியின்றி இயற்கையாகவே சூழவுள்ள உயர் நிலத்தால் அடைக்கப்பட்ட நீர்நிலை. நதியின் நீரை, கால்வாய் மூலம் கொண்டு வந்து சேர்த்து, அதன் மூலமாக உருவாக்கப்பட்ட நீர் நிலைகளுக்குக் கண்மாய் என்று பெயர். இப்புதினத்திலும் கண்மாயின் சிறப்பு உரைக்கப்படுகின்றது. துரை தன் டைரியில் எழுதியிருந்ததை கிட்டுப்பிள்ளை வாசித்தார். அதில், **"கண்மாய் நிறைந்து மறுகால் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. கண்மாய்க்கு முழுக் கொள்ளளவு தண்ணீர் வந்தவுடன் தானாகவே தண்ணீர் வெளியேறிப்போகும் தொழில் நுட்பத்தையும், வயக்காட்டுக்குத் தேவையான போது மட்டும் தண்ணீரைத் திறந்து வேண்டியளவு தண்ணீரை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதித் தண்ணீரை ஒரு சொட்டுக் கூட வீணாக்காமல் மடைகளைப் பூட்டுப் போட்டுப் பூட்டி வைக்கும் தொழில் நுட்பத்தை ஆச்சரியமாகப் பார்த்தேன்."**[7] **"அடுத்து கண்மாய்களையும் ஊருணிகளையும் தன்னுடைய இரண்டு கண்களைப் போல் பாவிக்கிறானே, காவல் காக்கிறானே இதை எப்படி அவர்களிடமிருந்து மாற்றுவது"**[8] என்ற குறிப்பு தமிழனின் தொழில் நுட்பமும் காக்கும் திறனும் நம்மை ஆச்சரியப்படுத்துகின்றது.

மேலும், அம் மக்கள் கண்மாய்க்குக் காவல் தெய்வமான அய்யனாரப்பனை வணங்கி, கண்மாயை மட்டும் காவல் காக்கல. என்னையும் சேர்த்துத் தான் காவல் காக்கிறார். ஒரு சொட்டு தண்ணீரை வீணாக்கினாலும் அய்யனாரப்பன் கண்ணுலருந்து தப்ப முடியாது என்ற நம்பிக்கை, தண்ணீரை வீணாக்காமலும் தெய்வமாக மதிக்கவும் கற்றுக் கொடுத்தது. நீரே தெய்வம் என்பதனையும் அந்நீரைக் காப்பதும் நம்மைக் காப்பதும் தெய்வமே என்ற உண்மை வெளிப்படுகின்றது.

## மண்ணைக் காக்கும் வேர்கள்

இன்று மணற்கொள்ளை, மலைக்கொள்ளை சாதாரணம். ஆனால் இவை நம்மை அழிக்கும் சாதனம். இதனை இன்னும் நாம் உணராமல் இருக்கின்றோம். புதினத்தில் மண்ணைக் காக்கும் வேர்கள் எவை என, மடைக்குடும்பனிடம் பேசிய போது துரைக்குப் புரிய வைப்பது போல் வாசகர்களாகிய நாமும் உணர வேண்டும் என்பதனை படைப்பாளர் அறிந்திருக்கிறார். மடைக்குடும்பன் கண்மாய்க் குறித்து எடுத்துரைத்தான். கண்மாய்க் கரைகளின் ஓரம் வளர்ந்துள்ள சங்கன் செடியின் வேர் கரையை உடைய விடாமல் காக்குது. அதோட சல்லிவேர் மண்ணரிப்பைத் தடுத்து அரண் போல் காக்கின்றது. இந்தச் செடிகளை அழிப்பவர்களுக்கு ஊரில் தண்டனை வழங்கப்படும். தண்ணீர்தான் எங்கள் உயிர். பனைமரத்தின் சல்லிவேர்கள் ரொம்ப பலமானது. கண்மாய்கரை கருங்கல் பாறை மாதிரி இருக்கக் காரணம் இந்த வேர்கள்தான். ஒரு கூடை மண் கூட அள்ள முடியாது. மண்வெட்டி, கடப்பாரை கூட கரையில பதியாது. வேர்கள் விடாது. கோடான கோடி உயிர்களைக் காக்கும் கண்மாய். கண்மாயைக் காக்கும் நீர்ப்பாய்ச்சி. அந்த நீர்ப்பாய்ச்சி மடைக்குடும்பனைக் காக்கும் அய்யனாரப்பன்.

இன்று நாம் செடிகளையும் மரங்களையும் அழித்ததால்தான் கண்மாய்கள் வறண்டு மணற் கொள்ளைக்கு வழிவகுத்திருக்கிறோம். நாம் செய்யும் தவறுகள் வரும் தலைமுறையினரைப் பாதிக்கும் என்பதனை நாம் இப்போது வாழும் வாழ்க்கையின்வழி உணர முடியும்.

## தற்சார்பு வாழ்வியல் முறை

மக்கள் வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. காலம் செல்லச் செல்ல இயற்கைச்சார்பு குறைந்து, செயற்கைச் சார்பு மக்கள் வாழ்வில் புகுந்தது. வெளவால் தேசம் புதினத்தில் மனிதர்கள் எவ்வாறு இயற்கைச்சார்பு வாழ்க்கை வாழ்ந்திருந்தார்கள் என்பதனை உணர்த்துகிறது. தாமிரபரணியை ஒட்டி வாழும் ஒவ்வொரு ஊருக்கும் கண்மாய், ஊரை ஒட்டி ஊருணி, ஊர்ப் பொதுக்கிணறு,.... மழையை மட்டுமே நம்பி வாழும் இந்தக் கரிசல் பூமி. வயல்களை விளைவிக்கக் கண்மாய், தோட்டங்களை விளைவிக்கக் கிணறுகள், மானாவாரிக் காடுகளை விளைவிக்க மழை. மாடுகளை வணங்குதல், சம்சாரிகளுக்கு மாடுகள் உதவுதல். சம்சாரியே வேட்டைக்காரனாக மாறுதல். மீன்பிடிக்கச் செல்லல். யுத்தம் என்றால் போருக்குச் செல்லல். அந்தந்த தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்களைத் தாமே உருவாக்குதல். ஒரு விஞ்ஞானிக்கு இருக்க வேண்டிய மூளையும் அறிவும் படிப்பறிவே இல்லாத ஒரு கரிசல் காட்டுச் சம்சாரியிடம் இருக்கிறது. எதற்காகவும் யாரையும் சார்ந்து வாழவோ எதிர்பார்த்து வாழ்வதோ தேவையில்லை. தலைமுறை தலைமுறையாய் இப்படி வாழும் தற்சார்பு வாழ்வியல் முறைக்கு இயற்கையே காரணம்.

### தன்னிறைவு பெற்ற சமுதாயம்

மனிதன் தம்முடைய முயற்சியினால் தன்னுடைய தேவைகளைப் பெற முயற்சிப்பது எங்கும் காணும் சமுதாய அமைப்பு. ஆனால் இங்கே இயற்கையின் கொடையாக, **“எல்லாவற்றிலும் தன்னிறைவும் இயல்புத் தன்மையும் உள்ள மனிதர்களை நாம் எப்படி வெற்றி கொள்வது? அவர்களுடைய உயிரை மட்டுமே நம்மால் எடுக்க முடியும். ஆனால் வெல்ல முடியாது. நோய், நொடி எல்லாவற்றிற்கும் இயற்கையே மருந்தாகிறது. காடுகள் எங்கும் நிறைந்து கிடக்கின்றன மூலிகைகள்”[9]…** என மனித முயற்சியின்றி இயற்கை வழங்கிய கொடையை அதன்வழியில் பாதுகாத்தாலே போதுமானது என்ற கருத்து இங்கே துரையின் உரை வாயிலாக வலியுறுத்தப்படுகின்றது.

### இயற்கையின் அங்கம் மக்கள்

குலக்கல்வி முறையை மாற்றி பொதுக்கல்வி முறையை புதிய கல்வித்திட்டத்தை நால்வர் குழுவுடன் இணைந்து தகவல்களைச் சேகரித்து அனுப்புமாறு மேலிடம் வேல்ஸ் துரையைப் பணித்தது. அப்போது அவர், **“மக்கள் இயற்கையின் ஓர் அங்கமாகவே வாழ்கிறார்கள். இயற்கையைக் கடவுளுடன் இணைத்து வணங்குவதையும் குறிப்பிட்டு, புதிய கல்வி முறையில் இதையெல்லாம் கட்டாயம் கணக்கில் கொள்ள வேண்டும்.”[10]** வேல்ஸ் துரை புதிய கல்வித் திட்டத்தில் இயற்கையோடு இயைந்த கல்வி கொடுக்க வேண்டும் என எண்ணுகிறார். ஆனால், அவர் நல்லெண்ணத்திற்கு மாறுபாடு ஏற்படும் போது இயற்கையை அழித்து புதியதைப் புகுத்த அவர் விரும்பவில்லை. மனிதன் இயற்கையோடு இயைந்த தன் வாழ்க்கையை மாற்றினால் இயற்கை நம்மை அழித்து விடும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இவ்வுண்மையை உணர்ந்தவராக வேல்ஸ் துரை படைக்கப்பட்டிருக்கிறார்.

### புற்றுச்சாமி

நிலத்து மண்ணை வளமாக வைத்துக் கொள்வதற்குக் காரணம் கரையான்கள். இன்னொன்று எறும்புகள். **“ஒரு அஞ்சடி ஆறடி ஆழத்துக்கு எறும்புக நெலத்துக்குள்ள போயி, மண்ணப் பூராத்தையும் நெலத்துக்கு மேல கொண்டாந்து போடும். அப்ப நெலத்துக்குள்ள நல்லா காத்துப் போயி மண்ணு வளமாகும். அதே மாதிரி நூறடி ஆழம் வரைக்கு நெலத்துக்குள்ள போயி மண்ணுகள மேல கொண்டாந்து நெலத்த பக்குவப் படுத்துற ஒரே உசுப்பிராணி இந்த கரையான்கள்.”[11]** என கரையான்புற்றுக்களைத் தெய்வாக வணங்கக் காரணத்தைச் சொன்ன மக்கள். அம்மண்ணையே மருந்தாகச் சிரங்கு புண் வராமல் இருக்க உடம்பில் பூசிக் கொள்வர். கரையான், எறும்பு போன்ற உயிரினங்கள் உழவர்களுடன் இணைந்து உழைக்கும் உழைப்பாளர்களாக இருக்கின்றனர் என்ற உண்மை புரிகின்றது. உழைப்புக்கு மரியாதை அதனை வணங்குதல் என்ற அடிப்படையில் தெய்வமாகப் புற்றை வணங்கிய மக்களின் பண்பாடு புரிகின்றது.

### உயிரினங்கள் உணர்த்தும் வாழ்க்கைத் தத்துவம்

அன்றே பிறந்து அன்றே அழிந்து போகும் ஒரு பிராணி ஈசலும் தட்டானும் இவை உணர்த்தும் வாழ்க்கைத் தத்துவம் என்னவென்பதை, **“மழை பேஞ்சவுடனே பூமி செழிக்க ஆரம்பிக்கும். காடு கரைக எல்லாம் பச்சைப் பசேல்னு மாறிப்போகும். மனுஷனுக்கு தாங்க முடியாத சந்தோஷம் தலைக்கு ஏறிரும். தலகால் தெரியாம ஆட ஆம்பிச்சிருவான். அந்த அகம்பாவத்த அடக்கத்தான் கடவுள் ஈசலையும் தட்டானையும் உலகத்துக்கு அனுப்பி மரணத்தை ஞாபகப்படுத்துறாரு…”[12]** ஆயிரம் ஞானிகள் சொன்னாலும் புரியாத நிலையாமைத் தத்துவத்தை ஒரு சம்சாரி வேல்ஸ் துரைக்குச் சொன்னதும் அவர் மக்கள் இயற்கையோடு தொடர்பு கொண்டுள்ள முறையை எண்ணி ஆச்சரியப்பட்டார். இந்த மக்களின் வாழ்வு மண்ணோடும், வணங்கும் கோயில்களோடும், நம்பிக்கையின் வடிவில் இருப்பதை உணர்ந்தார். நாமும் உணர வேண்டும் என்பதே படைப்பாளரின் நோக்கம்.

### வௌவால்களால் உருவாக்கப்பட்ட வனம்

மனிதர்களால் தனித்து வனத்தை உருவாக்க முடியாது. மரங்களை மட்டும் நட்டு வைப்பதால் வனங்கள் உருவாகிவிடாது. உயிரினங்களின் எச்சங்களால்தான் வனம் உருவாகின்றது என்ற உண்மையை, **“வௌவால்கள் பழங்களைத் தின்றுவிட்டு கொட்டைகளை வனம் முழுக்கவும் விதைத்து வனங்களை உருவாக்கியவை அவைகளே. அந்த வௌவால்களுக்கு நன்றி செலுத்தவே விழா எடுக்கிறோம்”[13]** என்ற உண்மை வனத்தை உருவாக்கியவர்களுக்கு நன்றி கூறுவது மனிதப் பண்பாடு என்பதனை உணர்த்துகின்றது.

### வனத்தின் குழந்தைகள்

பூமியின் பூர்வகுடிகளான ஆதிவாசிகள் இயற்கையின் விதிப்படி தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். பல்லுயிர்களையும் பாதுகாக்கும் காவலர்கள் ஆதிவாசிகள். அவர்கள் இயற்கையையும் உண்மையையும் நேசிக்கும் மக்களாக வாழ்ந்தமையை இப்புதினம் பதிவு செய்கிறது. **“ஆதிவாசிகள் வனத்தின் குழந்தைகள். அவன் வனத்தின் அத்தனை பாஷைகளையும் அறிந்தவன். கொடி, வண்டுகள், மிருகங்கள், பறவைகள், மேகங்கள், முகமறியா சத்தங்கள் இத்தனையும் அவன் அறிவான்”[14] “துரையவர்களே…. அவர்கள் மனிதர்களுக்கு வணக்கம் சொல்ல மாட்டார்கள். இயற்கையை மட்டுமே வணங்குவார்கள்.”** “**பொய் என்பதற்கும், திருட்டு என்பதற்கும் எந்த ஆதிவாசிகளின் பாஷையிலும் வார்த்தைகள் இல்லை துரையவர்களே. அவர்கள் பொய் சொல்வதுமில்லை, திருடுவதுமில்லை,….”[15] “நாம் இயற்கையை நேசிக்கிறோம். ஆதிவாசிகள் இயற்கையைப் பூஜிக்கிறார்கள்.”[16]** எனத் துரையின் துபாஷியான கிட்டுப்பிள்ளையின் வாயிலாக ஆதிவாசிகளின் உண்மைத்தன்மையை எடுத்தியம்புகிறது. நாம் வனத்தையும் வன உயிரினங்களையும் அழித்துக் கொண்டிருக்கிறோம். நம்மைப் பாதுகாப்பவர்களை நாமே அழிப்பதற்குச் சமம் இதனை மக்கள் உணர வேண்டும்.

### புவியின் புத்திரர்கள்

வானத்தையும் நட்சத்திரங்களையும் எண்ணிக் கொண்டு வெட்ட வெளியில் உறங்கிய காலம் இன்று மறந்து விட்டது அல்லது மறைந்து விட்டது என்றே சொல்லலாம். வெயில் காலமான சித்திரை மாதத்தில் மக்கள் வெளியில் படுத்திருப்பதைப் பார்த்து துரை, கிட்டுப் பிள்ளையிடம் சந்தேகம் கேட்க, **“போர்த்திக் கொள்ளாமல் உடுத்திய உடையுடன் விடிய விடிய நிலவொளி மேலில் பட, இயற்கைக் காற்று தாலாட்ட, கட்டாந்தரையில் உறங்கும் சுகம், தன் தாயின் வயிற்றில் குழந்தை உறங்கும் சுகத்திற்கு ஈடு பிள்ளாய். தேக ஆரோக்கியம் வலுப்பெறும், நோய் நொடி அண்டாது.”[17]** என அவர் கூறும் கருத்து ஏற்புடையதாக இருந்தாலும் இன்றைய சுற்றுச்சூழல் சுகாதாரமற்றதாக இருக்கும் சூழலில் இவ்வியற்கையை எப்படி ரசிப்பது என்ற கேள்வியும் நம்மில் எழுகிறது.

### முடிவுரை

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் என்ற திரையிசைக் கவிஞர் மருதகாசியின் பாடலுக்கிணங்க தமிழகம் இயற்கை வளத்தோடு இருந்ததைப் இப்புதினம் பதிவு செய்கிறது. நமக்கு நம் பெருமை தெரியாது என்பதற்கேற்ப நம் நாட்டு வளத்தை மேலைநாட்டைச் சேர்ந்த துரை அவர்களின் பார்வையில் சோ. தர்மன் அவர்கள் பதிவு செய்துள்ளார். இயற்கையோடு இயைந்ததாகத் தொடங்கிய மனித வாழ்வு காலம் செல்லச் செல்ல செயற்கை வாழ்வு எய்தி, இப்பொழுது என்றுமில்லா அவல நிலையினை எய்தியுள்ளது. அவ்வாழ்வு நாளடைவில் அறநெறியினின்றும் நீங்கிச் சென்றதால் தெய்வத்தன்மை பெறாமல் அழிவுப்பாதையில் செல்கின்றது என்பதனை இன்றைய வாழ்வு நமக்கு உணர்த்துகின்றது. இந்த உலகத்திலேயே உயர்ந்தவர்கள் மனிதர்கள் தான் என்றும், இந்த உலகமே நமக்காகப் படைக்கப்பட்டது என்ற எண்ணம் உடையவர்களாக

இன்றைய மனிதர்கள் வாழ்கின்றார்கள். இயற்கையின் படைப்புகளை அழித்து விட்டு தனக்கு அழிவைத் தேடிக் கொள்கிறார்கள். உயிரினங்கள் நம்மைச் சார்ந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நாம் தான் உயிரினங்களைச் சார்ந்து வாழ வேண்டும் என்ற உண்மை புரிதல் வேண்டும். இந்த உண்மையைப் புதினம் நமக்கு உணர்த்துகின்றது. சோ.தர்மன் இயற்கையோடு இயைந்த நம் வாழ்க்கையை நாம் தொலைத்து விடக் கூடாது. மீண்டும் அதனை மீட்டுக் கொண்டு வர வேண்டும் என்ற வேட்கையின் விளைவே இப்புதினம்.

## சான்றெண் விளக்கம்

1. ப. மருதநாயகம், தமிழின் செவ்வியல் தகுதி, (ஒப்பியல் கட்டுரைகள்), ப.129
2. சோ.தர்மன், வௌவால் தேசம், ப.113
3. மேலது, ப.105
4. மேலது, ப.7
5. மேலது, ப.105
6. மேலது, ப.81
7. மேலது, ப.116
8. மேலது, ப.109
9. மேலது, ப.105
10. மேலது, ப.108
11. மேலது, பக்.126,127
12. மேலது, ப.128
13. மேலது, ப.26
14. மேலது, ப.59
15. மேலது, ப.60
16. மேலது, ப.26
17. மேலது, ப.26

## துணை நூற்பட்டியல்

**முதன்மை ஆதாரம்**

1. சோ, தர்மன். வௌவால் தேசம். திருச்சி, முதல் பதிப்பு, அடையாளம் பதிப்பகம், 2021.

**துணைமை ஆதாரங்கள்**

1. இரா, சாரங்கபாணி. இயற்கை விருந்து. சென்னை, முதல் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், 1991.
2. ப, மருதநாயகம். தமிழின் செவ்வியல் தகுதி (ஒப்பிலக்கியக் கட்டுரைகள்). டெல்லி, முதல் பதிப்பு, பொன்ராணி பதிப்பகம், 2001.

## References

**Primary Source**

1. Cho, Dharman. *Vauvaal Desam*. Trichy, First Edition, Adaiyaalam Publishing House, 2021.

**Reference Books**

1. R, Saarangapani. *Nature's Feast*. Chennai, First Edition, Manivasagar Publishing House, 1991.
2. P, Maruthanayagam. *Classical Merit of Tamil*. New Delhi, First Edition, Ponrani publishers, 2001.

**How to cite this article:** M, Iraivani. "Nature and Man in Vauvaal Desam Novel". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 8-11, https://aijtls.com/index.php/aijtls/article/view/3.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.